Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூ. 1-50

உண்மை – அஞ்சாமை – நடு நிலைமை

Your Friends in Finance
SHABRA
நிதித்துறையில் உங்கள் நம்பிக்கையுள்ள நண்பன்
Shabra Unico Finance Ltd.

சுடர்: 2 யாழ்ப்பாணம் பிரபவ ஞூ ஆவணி மீ 05 உ வெள்ளிக்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ் பிறை 25 (21 — 08 — 1987) UTHAYAN A LIVELY TAMIL DAILY கதிர் 229

★ ராஜீவின் உத்தரவுப்படி கொழும்பு விரைந்தனர்

# ஜனதிபதி, அமைச்சர்களுக்கு 'கறுப்புப் பூனைகள்' பாதுகாப்பு

## அரச எம்.பிக்களுக்கும் விரைவில் வழங்கப்படும்

— அலுவலகச் செய்தியாளர்: கே. இரத்தினராஜசிங்கம் —

யாழ்ப்பாணம், ஆகஸ்ட். 21

ஜனதிபதி திரு. ஜே.ஆர். ஜெயவர்த்தன, பிரதமர் திரு.ஆர்.பிரேமதாஸ மற்றும் அமைச்சர்களுக்கு இந்திய 'கறுப்புப் பூனே' (BLACK CATS) படையினர் பாதுகாப்பு வழங்குவார்கள்.

இதற்காக இப்படைப் பிரிவைச் சேர்ந்த சுமார் நூறு வீரர்கள் ஏற்கனவே கொழும்பு வந்து சேர்ந்திருக்கின்றனர் என்று இங்கு செய்தி கிடைத்துள்ளது.

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியின் விசேட பணிப்பின் பேரிலேயே 'கறுப்புப் பூனேப்' படையினர் கொழும்புக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றனர்.

கடந்த செவ்வாயன்று ஜனதிபதி மற்றும் அமைச்சர்களின் உயிருக்கு உலைவைக்களடுத்த முயற்சிவை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கிறது.

அரச நாடாளுமன்றக் குழுக் கூட்டத்தில் கிரனேட் வீசப்பட்ட சம்பவத்தையடுத்து அன்றைய தினம் (செவ்வாய்) வடக்கில் தங்கியிருந்த இந்தியத் தென்பிராந்தியத் தளபதி திபேந்தர் சிங் கொழும்பு விரைந்தார்.

அன்று மாலையே இந்தியத் தூதர் டிக்ஸிற்றுடனும், ஸ்ரீ லங்கா கூட்டுப்படைத் தளபதியான சிறில் ரணதுங்காவுடனும் அவர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அதன் பின்னர் அவர் உடனடியாகப் புதுடில்லி புறப்பட்டுச் சென்றர்.

அவர் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியைச் சந்தித்துப் பேசினர். அதைத் தொடர்ந்து '' கறுப்புப்

(4ஆம் பக்கம் பார்க்க)

### ஸ்ரீ லங்கா பௌசர்களில் எரிபொருள்

யாழ்ப்பாணம், ஆக. 21

ஸ்ரீ லங்கா பௌசர்களில் யாழ்ப்பாணத்துக்கு எரிபொருள் எடுத்து வரப்படுகிறது.

நான்கு ஸ்ரீலங்கா பௌசர்கள் யாழ்ப்பாணத்துக்கு எரிபொருளை எடுத்து வந்தன. (இ-10)

### கொழும்பு - யாழ் பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஆக. 21

கொழும்பு- யாழ் கடுகதி பஸ் சேவை மீண்டும் நாளை முதல் ஆரம்பமாகிறது. (இ-10)

### இன்று கொடிகாமம் வரை

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ்தேவி ரயில் சேவை இன்று முதல் கொடிகாமம் வரை நடைபெறும். (இ-10)

## நல்லூர்க் கந்தன் தேர் சிறப்பிதழ்

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை (23-8-87) உதயன், அதிக பக்கங்களுடன், நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழாச்சிறப்பிதழாக வெளிவருகிறது.

நல்லூர் முருகனின் அழகிய வண்ணச் சித்திரம் முகப்பை அலங்கரிக்க—

பல மூத்த எழுத்தாளர்களினதும், இளம் எழுத்தாளர்களினதும் கந்தன் புகழ் பேசும் அரிய கருத்தோவியங்கள் மிளிர—

வண்ண இதழாக மலரும் ஞாயிறு உதயனை உங்கள் ஏஜண்டிடம் முன்கூட்டியே பதிவு செய்து பெற்றுக்கொள்ளுங்கள்.

தாமதித்தால் கிடைக்காது.

விலை ரூ. 1-50 மட்டுமே.

தமிழ்நாட்டிலிருந்து திரும்பிய

## 40 தமிழ் அகதிகளில் 34 பேர் விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 21

இந்தியாவில் இருந்து நாடு திரும்பிய தமிழ் அகதிகள் 40 பேரை கடலில் வைத்து கைது செய்த இலங்கைப் படையினர், அவர்களில் ஆறு பேரைத் தடுத்து வைத்துக்கொண்டு, மிகுதி 34 பேரை நேற்று மாலை விடுதலை செய்தனர்.

கைதான 40 பேரும் காங்கேசன்துறை முகாமில் தடுத்து வைக்கப் பட்டிருந்தனர்.

கைதானவர்களில் 34 பேரை யாழ். செயலக அதிகாரிகளிடம் ஒப்படைப்பதாக கேணல் குணவர்த்தன யாழ். செயலகத்துக்கு நேற்று அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து செயலக அதிகாரி திரு. குணராசா அங்கு சென்று காங்கேசன் துறைப் பொலீஸ் நிலையத்தில் வைத்து இராணுவ அதிகாரிகளிடம் இருந்து 34 அகதிகளைப் பொறுப்பேற்ருர்.

விடுதலையானேரில் 29 பேர் ஆண்கள். இருவர் பெண்கள். 3 குழந்தைகள்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள ஆறு பேரின் நிலை குறித்து யாழ் செயலகத்திற்கு தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (உ-7)

### 40 ஆயிரம் நிலக்கண்ணி வெடிகள்

யாழ்ப்பாணம், ஆக. 21

வடமராட்சிப் பகுதியில் உள்ள இராணுவ முகாம்களைச் சுற்றி சுமார் 40 ஆயிரம் நிலக் கண்ணி வெடிகள் புதைத்து வைக்கப்பட்டிருந்தன என்று கூறப்படுகிறது.

இந்திய அமைதிப்படையினர் வடமராட்சிப் பகுதிக்குச் சென்றதை அடுத்து ஸ்ரீலங்கா இரா

(4 ஆம் பக்கம் பார்க்க)

### அவசரகாலச் சட்டம் நீடிப்பு

கொழும்பு, ஆக. 21

அவசரகாலச் சட்ட நீடிப்புப் பிரேரணை நேற்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்

(4ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதம் இங்கு இறுதிக் கட்டத்தில்...

## காமினி சொல்கிருர்

கொழும்பு, ஆக. 21

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி, ஜனதிபதி ஜெயவர்த்தன ஆகியவர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலை முயற்சிச் சம்பவங்கள் பயங்கரவாதம் இந்த நாட்டில் இறுதிக் கட்டத்தை அடைந்து விட்டதையே எடுத்துக் காட்டுகின்றன.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகையில் அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவசரகால நீடிப்புப் பிரேரணையை பிரதமர் சபையில் சமர்ப்பித்தார்.

பின்னர் கடந்த செவ்வாய்க்கிழமை நாடாளுமன்றக் கட்டடத்தில் நடந்த சம்பவம் பற்றி பிரதமர் அறிக்கை ஒன்றைச் சபையில் சமர்ப்பித்தார்.

### பிரதமர்

பிரதமர் சொன்னதாவது;

செவ்வாய் நடத்தப்பட்ட தாக்குதல் ஒரு கோழைத்தனமான செயல்.

ஜனநாயக வழியில் நாடு சுபீட்சப் பாதையில் செல்வதை இப்படியான சம்பவங்கள் மூலம் தடுத்துவிட முடியாது. குழப்பம் ஏற்படுத்தும் சக்திகளின் வலையில் விழுந்துவிடக் கூடாது.

செவ்வாய்த் தாக்குதல் பற்றி பலவித கருத்துக்கள் வெளியிடப்படுகின்றன. அவை பற்றி நான் ஆச்சரியப்படப் போவது இல்லை.

இப்படிப் பிரதமர்

(4ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

21-8-1987

வெள்ளிக்கிழமை

சுபநேரம்:
6.05 முதல் 7.35வரை

ராகுகாலம்:-
10 35 முதல்-12.05வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

பிரதோஷ விரதம்

முச்சந்தி முரளி



பயங்கரவாதம் இறுதிக் கட்டத்தை அடையுதோ அல்லது உச்சக் கட்டத்தை அடையுதோ...? எது சரி.

# விசாரணை இறுதிக் கட்டத்தில்

## சம்பவ நேரம் 800 ஊழியர் வரை நாடாளுமன்றக் கட்டடத்தில் இருந்தனர்

கொழும்பு, ஆக. 21

கடந்த செவ்வாய் நாடாளுமன்றக் கட்டடத்தில் இடம் பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பான விசாரணைகள் முக்கிய கட்டத்தை அடைந்துள்ளன.

இப்படி கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சந்தேக நபர்கள் யார் என்பது பெரும்பாலும் கண்டு பிடிக்கப்பட்டாகிவிட்டது.

யார் அந்தச் சந்தேக நபர்கள் என்பதைத் தெரிவிப்பதற்கு அதிகாரிகள் மறுத்துவிட்டனர்.

தாக்குதல் நடந்த அறைக்குள் வந்துபோன ஒவ்வொருவரின் நடவடிக்கையையும் நாம் உன்னிப்பாகக் கவனித்து வருகின்ருேம்.

நாடாளுமன்ற அலுவலகத்தில் பணியாற்றும் சுமார் எண்ணூறு ஊழியர்களும் விசாரிக்கப்பட்டனர். அனைவரின் கைவிரல் அடையாளங்களும் எடுக்கப்பட்டன.

சம்பவதினம் தாக்குதல் நடந்த அறைக்குள் சுமார் 50 பாதுகாப்புப் படையினரும் சில நாடாளுமன்ற ஊழியரும் வந்து போனர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த செவ்வாய் எண்ணூறு ஊழியர்களும் விசாரணை செய்யப்பட்ட போது கை கழுவக்கூட அனுமதிக்கப்படவில்லை.

இதனல் அவர்கள் மதிய போசனம் அருந்த முடியாமற் போய்விட்டது.

— இப்படி மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

### பலத்த சோதனை!

கொழும்பு, ஆக. 21

நேற்று நாடாளுமன்றம் கூடியபோது பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

நாடாளுமன்றப் பிரதேசத்தை நோக்கிச் சென்ற வாகனங்கள் தீவிர சோதனைக்குள்ளாகின.

'மெட்டல் டிரெக்டர்' சாதனம் மூலம் சகல பொருள்களும் சோதனை இடப்பட்டன. (இ-எ)

### சிராவஸ்திக்கு பாதுகாப்பு

கொழும்பு, ஆக. 21

நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்கும் சிராவஸ்தி கட்டடத்துக்குப் பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது.

குண்டுவெடிப்புச் சம்பவத்தைத் தொடர்ந்து சிராவஸ்திக் கட்டடம் துருவித்துருவிச் சோதனையிடப்பட்டது.

மலசலகூடம், சமையல் அறை கூட சோதனைக்குள்ளாகின.

எம். பிக்களைச் சந்திக்க பொதுமக்கள் பயன்படுத்தும் அறையும் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. (உ-எ)

ஒப்பந்தம் பற்றிய

## தன் கருத்தை பிரதமர் சபையில் அறிவிப்பார்

இந்திய–இலங்கை ஒப்பந்தத்தில் விதிகள், நிபந்தனைகள் பற்றிய சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்போது எனது கருத்தைத் தெரிவிப்பேன். இப்போது ஒப்பந்தம் பற்றி கருத்துத் தெரிவிக்கப் போவது இல்லை.

பிரதமர் பிரேமதாஸ நேற்று நாடாளுமன்றத்தில் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் மேலும் சொன்னதாவது:

ஒப்பந்தம்பற்றி இன்று நான் பேசமாட்டேன். நாடாளுமன்றத்தில் பேச சந்தர்ப்பம் எனக்கு வரும்.

ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ள விதிகள், நிபந்தனைகள் சட்டமூலமாக நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அப்போது எனது கருத்தை வெளியிடுவேன்.

எம். பிக்கள் மட்டுமல்ல, பொதுமக்களும் அச் சட்டமூலத்தை அப்போது பரிசீலனை செய்ய முடியும்,

தற்போதைய அரசமைப்புச் சட்டத்துக்கு முரணாக எந்தச் சட்டமும் நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவரப் படமாட்டாது.

—இப்படி பிரதமர் சொன்னர். (உ.எ)

### இழுத்து வரப்பட்ட வாகனம்

இரண்டு வருடங்களுக்கு மேலாக யாழ் கோட்டையில் விடப்பட்டிருந்த யாழ் செயலக வாகனம் ஒன்று நேற்று செயலகத்துக்கு கட்டி இழுத்து வரப்பட்டது.

கோட்டையில் விடப்பட்ட ஏனைய அரச திணைக்களங்களின் வாகனங்கள் பாவிக்க முடியாத அளவுக்கு சேதமடைந்திருப்பது தெரிந்ததே. (உ-7)

### 8 ஆம் திகதி சபை கூடும்

கொழும்பு, ஆக. 21

நாடாளுமன்றம் மீண்டும் அடுத்த மாதம் எட்டாம் திகதி கூடும். (உ-எ)

## இந்திய--இலங்கை ஒப்பந்தம் பற்றி விவாதிக்க எதிர்க்கட்சி முயற்சி

### சபாநாயகர் தடுத்துவிட்டார்

கொழும்பு, ஆக. 21

இந்திய—இலங்கை ஒப்பந்தம் பற்றி விவாதிக்க எதிர்க்கட்சி எம்.பிக்கள் மேற்கொண்ட முயற்சிகளை சபாநாயகர் தடுத்துவிட்டார்.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியபோது, எதிர்க்கட்சி எம்.பிக்கள் சிலர் ஒப்பந்தம் பற்றி விவாதிக்க அனுமதிக்க வேண்டும் என்று சபாநாயகரைக் கேட்டுக்கொண்டனர்.

அதற்கு மறுத்துவிட்டார் சபாநாயகர்.

''அரசமைப்புச் சட்டத்தின் கீழ் தனக்குள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஜனதிபதி மேற்கொண்ட நடவடிக்கை குறித்து நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப முடியாது'' — இப்படி சபாநாயகர் தெரிவித்தார். (இ-எ)

இலங்கை வங்கி

## யாழ் பிரதான கிளையில் 24முதல் பணப்புழக்கம்

யாழ்ப்பாணம், ஆக 21

இலங்கை வங்கியின் யாழ்ப்பாண பிரதான கிளை (ஆஸ்பத்திரி வீதி) அலுவலகம் எதிர்வரும் 24-ஆம் திகதி திங்கட்கிழமை முதல் பணப் புழக்கத்தை ஆரம்பிக்கின்றது.

யாழ் அரசாங்க அதிபரினதும் வங்கி முகாமையாளரினதும் தீவிர முயற்சியால் இது கைகூடுகிறது.

பிரஸ்தாப வங்கி இந்திய அமைதிப் படையின் பாதுகாப்புடன் காலை 9 மணி முதல் 11 மணி வரை பணப்புழக்கத்தைச் செய்யும்.

இது ஒரு பரீட்சார்த்த முயற்சி ஆகும். இது வெற்றிபளிக்கும் பட்சத்தில் ஏனைய கிளைகளிலும் விரைவில் பணப்புழக்கம் ஆரம்பிக்கப்படும். (இ-7)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★★★★★★★★★
★சின்னஞ் சிறு★
★ விளம்பரம் ★
★★★★★★★★★

**விற்பனைக்கு**

கண்ணதாசன், C. N. அண்ணாத்துரை, டாக்டர் உதயமூர்த்தி போன்றோரின் பல அரிய நூல்கள் தற்போது விற்பனையாகி வருகின்றன நல்லூர் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

நல்லைநகர் நூல் யாழ்ப்பாண இராச்சியத்தினதும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலினதும் வரலாறு கூறும் ஆய்வு நூல். கந்தையா குணராசா எம். ஏ. பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். (1465)

சோவியத் சமாதான முயற்சிகளைப் பற்றி அறியவும், சோவியத் நாட்டைப் பற்றி அறியவும், நம் நாட்டு சமாதான இயக்கத்தின் முன்னோடிகளில் ஒருவரும், உலக சமாதானக் சவுன்ஸில் உறுப்பினரும், சட்டத்தரணியுமாகிய த துரைசிங்கம் எழுதிய ''லெனினும் ஆசியாவும்'' என்ற நூலைப் படியுங்கள். இந்நூலின் தமிழ், சிங்கள, ஆங்கில பதிப்புகள் புத்தகசாலைகளில் கிடைக்கும். விலை ரூபா 10/- சோஷலிஸ ஆய்வுக் கழகம், 31, வில்சன் வீதி, கொழும்பு - 12. (676)


# 297 பிக்குமார் மீண்டும்

## வடக்கு - கிழக்கில் குடியேறுவர்

### 97 விகாரைகளையும் இயக்கி வைக்க திணைக்களம் முயற்சி

வவுனியா, ஆக. 21 வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள அல்லது இருந்த 97 பௌத்த விகாரைகளைச் சேர்ந்த 297 பிக்குமார்களை மீண்டும் அவ்விடங்களில் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகளை பௌத்த அலுவல்கள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

இத்தகவலை பௌத்த அலுவல்கள் ஆணையாளர் திரு அபயவீரக்கோன் தெரிவித்தார்.

பிக்குமார்களை குடியமர்த்தும் போது உணவு, இருப்பிடம் போன்ற வசதிகளை ஏற்படுத்துவதை விட மாணவபிக்குமாருக்கு கல்வி புகட்டுவதிலேயே சிக்கல்கள் இருப்பதாக இவர் கூறினார்.

வடமத்திய பகுதிக்கு அண்மையில் ஒருபௌத்த கல்வி நிலையத்தை நிறுவுவதன் மூலம் இப்பிரச்சினையைத் தீர்க்கலாம் என்று பிக்குமார் ஆலோசனை தெரிவித்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மன்னார், முல்லைத்தீவு, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 297 பிக்குமார்களும் தாம் முன்பிருந்த இடங்களில்சென்று வசிக்க விருப்பம்தெரிவித்துள்ளனர் என்றும் திரு. அபய வீரக்கோன் தெரிவித்துள்ளார். (இ-164)

## பூஸா தமிழ்க் கைதிகளை விடுவிக்கும் பணி மீண்டும் ஆரம்பமாகும்

கொழும்பு ஆக. 21 பூஸாபெலவத்த தடுப்பு முகாம்களில் உள்ள தமிழ் அரசியல் கைதிகளை விடுவிக்கும் வேலைகள் மீண்டும் ஆரம்பமாகலாம் என்று அறிவிக்கப்படுகின்றது.

இம் முகாம்களுக்குப் பொறுப்பான அதிகாரி இந்திரா விக்கிரமசிங்கா இதனைத் தெரிவித்தார்.

இவர்களை விடுவிக்கும் வேலை கடந்த சில தினங்களாக தடைப்பட்டிருந்தது.

தடைப்பட்டதற்கான காரணத்தைத் தெரிவிக்க அந்த அதிகாரி மறுத்துவிட்டார். (இ- எ)

### இந்திய கடற்படை வைத்திய கிளினிக் கப்பல் திருமலைக்கு

காங்கேசன்துறையில் இயங்கிய இந்திய கடற்படையினரின் வைத்திய கிளினிக்குகள்மூடப்பட்டு இந்திய கடற்படைக் கப்பல் திருமலைக்கு புறப்பட்டுள்ளது.

திருமலை மக்களுக்கு வைத்திய சிகிச்சை அளித்துவிட்டு இம்மாத இறுதியில் மீண்டும் இக்கப்பல் காங்கேசன்துறை வருமென தெரிவிக்கப்படுகிறது (இ-68)

### இலக்கத் தகடு

கொடிகாமம் ஆக. 21 யாழ் அபிவிருத்திச் சபையின் கச்சாய் உப அலுவலக எல்லைக்குட்பட்ட சைக்கிள் உரிமையாளர்கள் இலக்கத் தகடுகளை அலுவலகத்தில் மிக விரைவாகப் பெற்று வருகின்றனர். (இ- 75)


★ விற்பனைக்கு ★

வல்வெட்டித்துறை பழைய பொலீஸ் நிலையத்திற்கு முன்பாக 2 பரப்புக் காணி வீடு, கிணறு, சுற்றுமதில் ஆகிய வசதியுடன் விற்பனைக்கு இருக்கிறது.

தொடர்புகொள்ளவேண்டிய முகவரி:-

திரு. S அன்னலிங்கம்
புத்தூர் மேற்கு,
தபால் நிலைய ஒழுங்கை, புத்தூர்.



கேள்வுப்பத்திரம்

Lanka Cement Limited
Kankesanthurai

முருங்கன் களிமண் ஏற்றிவந்து தொழிற்சாலையில் விநியோகிப்பதற்கான கேள்வுப் பத்திரம் (TENDER)

Tender No. CL/SU/K/T/01/87

காங்கேசன்துறையில் உள்ள எமது

சீமெந்துத் தொழிற்சாலைக்கு

முருங்கன் களிமண் நிலையத்தில் இருந்து லொறிகளில் களிமண் ஏற்றி இறக்குவதற்கான கேள்வுப் பத்திரங்கள் (Tenders) கோரப்படவுள்ளன.

மேற்படி கேள்வுப் பத்திரங்கள் (Tender-Documents) விநியோக அதிகாரியின் காரியாலயத்தில் சாதாரண வேலை நாட்களில் காலை 8-30 முதல் மாலை 4-00 வரையிலும் 22 8-87 சனிக்கிழமை பகல் 12-00மணிவரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாகரூபா 50/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வுப்பத்திரங்கள் 26 - 8 - 87 மாலை 4-00 மணி வரை விநியோகிக்கப்படும்.

கேள்வுப்பத்திரதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வுப்பத்திரங்கள் 27 - 8 - 1987 முற்பகல் 10-00 மணிக்கு கேள்வுப்பத்திரதாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

பிரதிப் பொதுமுகாமையாளர்,
லங்கா சீமெந்து லிமிட்டெட்,
18.8 1987 காங்கேசன்துறை.




## மக்கள் முகம்

### சாவகச்சேரி திவ்யஜீவன சங்கம்

சாவகச்சேரி, ஆக. 21 சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்கவருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஆத்மஜோதி ஆசிரியர் திரு. நா. முத்தையா நடப்பு வருடத் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

திரு .க. இராசரத்தினம், திரு த. இராமலிங்கம் ஆகியோர் உபதலைவர்களாகவும் திரு. க. கைலேஸ்வரன் செயலாளராகவும் திரு. ஏ இராசரத்தினம் பொருளாளராகவும் தெரிவுசெய்யப்பட்டனர். (இ-31)

### பாதயாத்திரை

சாவகச்சேரி திவ்ய ஜீவன சங்க செயற்குழு, குருபவனத்தில் தலைவர் திரு. நா. முத்தையா தலைமையிற் கூடி இன்று வெள்ளிக்கிழமை நல்லை முருகப்பெருமானின் தலத்திற்குப் பாதயாத்திரை செய்வதாகத் தீர்மானித்துள்ளது.

### மருதனமடம் ஆச்சிரமத்தில் நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஆக. 21 மருதனமடம் கிறிஸ்தவ சேவா ஆச்சிரமத்தின் 48 ஆம் ஆண்டு நிறைவு விழா இன்று வெள்ளிக்கிழமை நடை பெறுகிறது.

காலை 6 மணிக்கு திருவிருந்து பரிசுத்த நற்கருணை ஆராதனையும் 8 மணிக்கு திருமுழுக்கும், நன்றி செலுத்தும் ஆராதனையும் இடம்பெறும்.

பகல் 10 மணிக்கு கலந்துரையாடலும், 12 மணிக்கு மன்றாட்டு ஜெபமும், மாலை 3-30மணிக்கு பகிரங்கக் கூட்டமும் நடைபெறும். (இ-7)

### தேர்த்திருவிழா வானொலியில் அஞ்சல்

யாழ்ப்பாணம், ஆக. 21 நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தேர்த்திருவிழா, தீர்த்தத் திருவிழா ஆகியனவற்றின் நேரடி அஞ்சல் யாழ்ப்பாண வானொலி மூலம் நடைபெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## கோப்பாய் உ. அ. அதிபர் பிரிவில் பாதிக்கப்பட்டோருக்கு புனர்வாழ்வுப் படிவங்கள்

கோப்பாய், ஆக. 21 கோப்பாய் உதவிஅரச அதிபர் பிரிவில்பாதிக்கப்பட்டவர்களுக்கான புனர்வாழ்வு விண்ணப்பப்பத்திரங்கள் கடந்த 19ஆம் திகதி முதல் வழங்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் உதவிஅரச அதிபர் திரு. க. குலேந்திரா இவ்வாறு தெரிவித்தார்.

அச்சுநகர், தோப்பு, அச்சுவேலி வடக்கு, மத்தி, தெற்கு, ஆவரங்கால் ஆகிய பகுதி மக்களுக்கு அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயத்திலும் சுதிரிப்பாய், இடைக்காடு, தம்பாலை, பத்தமேனி ஆகிய இடங்களில் வசிப்போருக்கு சுதிரிப்பாய் ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாலத்திலும் வைத்து விண்ணப்பப்பத்திரங்கள் வழங்கப்படுகின்றன.

இவை எதிர்வரும் 23 ஆம் திகதி வரை வழங்கப்படும் என்றும் ஏனைய இடங்களில் வசிப்போருக்கு எதிர் வரும் 25ஆம் திகதி வரை கோப்பாய் உதவி அரச அதிபர் பணிமனையில் வைத்து வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (இ-7-ரி)

## திருமலையில்படையினர் அட்டகாசம் தொடர்கிறது

யாழ்ப்பாணம், ஆக.21 திருகோணமலை மாவட்டத்தில் அரச படையினரின் அட்டகாசங்கள் குறித்து பொதுமக்கள் இந்திய அமைதிப் படையிடம் பலமுறை முறையிட்டும் எதுவித பலனும் கிட்டவில்லை.

அட்டகாசங்களை திருமலை மாவட்ட புலிகளின் பிரதிநிதி திரு. பதுமன் புதன்கிழமை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் விவரித்தார். அவையாவன:

★ திருமலை மார்க்கெட்டில் உள்ள சிங்களவர்கள் சண்முக வித்தியாலயத்திற்கு அண்டியவீதிகளில் நடமாடிய தமிழர்களைத் தாக்கினர். அதுமட்டுமன்றி அப்பகுதிக்குவந்த அரசபடையினர் அங்கு காணப்பட்ட புலிக்கொடிகளை அகற்றியதுடன் பிரபாகரனின் படத்தையும் கிழித்தெறிந்தனர்.

★ ஏற்கனவே பல இனக்கலவரங்களில் பாதிக்கப்பட்ட கன்னியாவிலுள்ளதமிழர்களது உடைமைகள் இராணுவத்தினரின் உதவியுடன் சிங்களவர்களினால் கொள்ளையிடப்பட்டன.

★ புல்மோட்டைப் பகுதியில் ஏற்றப்பட்டிருந்த புலிக்கொடிகளை இராணுவத்தினரும், பொலீஸாரும் அகற்றினர். (இ ஒ-7)

## செய்திக்கொத்து

### அகதிகளுக்கு உடுபுடைவை

மானிப்பாய், ஆக. 21 மானிப்பாய் பகுதியில் வன்செயல் காரணமாக இடம் பெயர்ந்து வந்துள்ளவர்களுக்கு மானிப்பாய் பரிஸ்லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் உடுபுடைவைகள் வழங்கப்பட்டன.

கட்டுடை தமிழ்கலவன் பாடசாலையில் லயன்ஸ் கழக உபதலைவர் திரு. நா. நகுலேஸ்வரன் இதனை வழங்கினார்.

லயன்ஸ்கழக உறுப்பினர்கள் டாக்டர் வி. எஸ். கி. எம். மூர்த்தி, சி. பாலகிருஸ்ணன், எம். சிவகுமாரன், ரி. சிதம்பர நடராசா, ஆ. ஜெயராஜன் ஆகியோரும் விழாவில் கலந்து கொண்டனர்.

வைபவத்தை மானிப்பாய் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர் திரு. எஸ். சிவகுமாரன் ஒழுங்கு செய்திருந்தார். (இ-90)

### செனஜேம்ஸ் மகளிர் பாடசாலை திறக்கப்படுகிறது

யாழ்ப்பாணம், ஆக.21 யாழ்ப்பாணம் சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை எதிர்வரும் 24ஆம் திகதிதிங்கட்கிழமைமூன்றாந் தவணைக்காக திறக்கப்படும்.

இவ்வாறு அப்பாடசாலையின் பெற்றோர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இராணுவக் கெடுபிடிகள் காரணமாக மேற்படி பாடசாலையும் சேதமடைந்துகடந்தஇரண்டு மாதங்களுக்கு மேலாக மூடப்பட்டிருந்தது. (இ-7)

### கோட்டை இராணுவத்திடம்

## முன்பு பறி கொடுத்த சைக்கிள்களைப் திரும்ப பெற பலர் முயற்சி

குருநகர், ஆக.21 பொதுமக்கள் தாம் ஸ்ரீலங்கா இராணுவத்திடம் முன்பு பறிகொடுத்த உடைமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக யாழ்- பொலீஸ் நிலையத்தினுள் செல்ல ஒரு சில தினங்களில் அனுமதிக்கப்படுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இராணுவத்திடம் தாம் பறிகொடுத்த சைக்கிள்கள், மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றைத் திரும்பவும் பெறுவதற்காக நாளாந்தம் பலபொது மக்கள் பிரதான வீதியில் உள்ள கடலையைக் கடந்து போக அனுமதிகோரி வருகின்றனர்.

ஆனால் இன்னும் அனுமதி கிடைக்கவில்லை.

யாழ்- கோட்டை இராணுவம் முன்பு நகரில் ரோந்து சுற்றிய போது எடுத்துச் சென்ற சைக்கிள் யாழ்-பொலீஸ் நிலைய கட்டட அறைகளில் வைக்கப்பட்டுள்ளன. (இ-உ-51)

### சென் ஜோன் அம்புலன்ஸ் கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21 சர்வதேச சென். ஜோன். அம்புலன்ஸ் படையின் வடமாகாண ஆணையாளருக் குட்பட்ட பிரிவுகளின் சார்ஜன் தரத்திற்கு மேற்பட்டவர்களுக்கான பொதுக் கூட்டம் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமைநடைபெறும்.

மேற்படி கூட்டம்யாழ் ஆயுர்வேத கல்லூரியில் காலை 9 30 மணிக்கு மாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னாசித்தம்பி தலைமையில் நடைபெறும். (இ-7)

### நிறைவுவிழா

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூகநிலையத்தின் 41 ஆவது ஆண்டு நிறைவு விழாவும், வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டியும் அடுத்த மாதம் ஐந்தாம், ஆறும், ஏழாம் திகதிகளில் நடைபெறும். இ-69)

### கிழக்கில் புலிகள் காரியாலயம்

மட்டக்களப்பு, ஆக 21 மட்டக்களப்பு- அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் (அரசியல் பிரிவு) காரியாலயங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, கல்முனை ஆகிய இடங்களில் காரியாலயங்கள் திறக்கப்பட்டுள்ளன.

செங்கலடி, திருக்கோவில், கல்லாறு, வெல்லாவெளி ஆகிய இடங்களிலும் காரியாலயங்களைத் திறக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முஸ்லிம் பகுதிகளிலும் திறக்க வேண்டுமென்று முஸ்லிம் இளைஞர்கள் [illegible] (இ-21)

## 11 கோரிக்கைகள் இயக்கம் வடபகுதியில் அழிவுகளைப் பார்வையிட்டது

யாழ்ப்பாணம், ஆக. 21 பதினொரு கோரிக்கைகள் இயக்கம் வடபகுதிக்கு வந்து இங்குள்ள அழிவுகளை நேரில் பார்வையிட்டது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைகளை ஏற்றுக்கொண்ட தொழிற்சங்கங்களின் பிரதிநிதிகளான-பொது எழுதுவினைஞர்சேவைகள்மன்ற செயலர் திரு. ஜி. மகாநாம இலங்கை ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் திரு. எச். என். பெர்னாந்தோ, இலங்கை ஆசிரியர் சங்க அமைப்புச் செயலர் திரு. ஐ. [illegible] சிங்க, கைத்தொழிற்துறை தொழிற் சங்க உறுப்பினர்கள் திரு. அன்ரன் மார்க்கஸ், திரு. ராஜா ஆகியோரே இந்த இயக்கத்தின் உறுப்பினர்களாக இங்கு வந்திருந்தனர்.

கடந்த வியாழக்கிழமை யாழ் வந்த இவர்கள் நெல்லியடி, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, பருத்தித்துறை, காங்கேசன்துறை, குரும்பசிட்டி, புன்னாலைக்கட்டுவன் போன்ற இடங்களில் ஏற்பட்டிருக்கும் அழிவுகளை [illegible] (இ-7)


பிரயாண ஒழுங்குகள்

★ குவைத் ★சவூதிஅரேபியா ★

பின்வரும் வேலைகட்கு ஆட்கள் தேவையாக இருக்கிறது விருப்பமுள்ளவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்

★ சவூதி அரேபியா, Leading American Managed Hospital
★ FEMALE MEDICAL RECORDS CLERKS — இரண்டு வருட அனுபவம், ஆஸ்பத்திரி மருத்துவ பதிவாளர் (Hospital Medical Records Department)

★ FEMALE WARD CLERKS
ஒருவருட அனுபவம்; ஆஸ்பத்திரிவாட் எழுதுவினைஞர். Hospital Ward Clerk

★ MALE SUPPLY CLERKS
ஒரு வருட அனுபவம் வழங்கல் பகுதி On- year supply Poition

★ சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்
★ இரண்டு வருட ஒப்பந்தம்
★ இலவச சாப்பாடு தங்குமிட வசதி
★ உடனடிப் பிரயாணம்

Approval No. AL / 96/13/87

★ HOSPITAL SUPERVISOR (Cleaning Section)
இதற்கு Passport தந்தவர்கள் உடன் தொடர்புகொள்ளவும்

★ குவைத் ★

★ கனரக வாகன சாரதிகள் HEAVY DUTY DRIVERS } சம்பளம் 105 K.D.
குவைத் கனரக சாரதியாக வேலை செய்யக்கூடிய குவைத் வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள்
★ 1 வருட அனுபவம் (K. T. Licence)

★ LIGHT DUTY DRIVERS பாரம் குறைந்த வாகன சாரதிகள் } 85 K. D.
குவைத் பாரம்குறைந்த வாகன சாரதியாக வேலை செய்யக்கூடிய வாகன அனுமதிப்பத்திரம் உள்ளவர்கள்
1 வருட அனுபவம் (K. T. Licence)

★ இரண்டு வருட ஒப்பந்தம்
★ இலவச தங்குமிடவசதி
★ உடனடிப் பிரயாணம்

Approval No. 96/Advt./12/87

★ Labour Licence No. 96

★ I. K. D. 106 S. R.

★ 20 ஆம் திகதி காலை இங்கிலாந்து பிரயாணம்

★ மிக முக்கிய அறிவித்தல்
BES Engineering Corporation (Thaivan) Kuwait, இது சம்பந்தமாக Pass Port தந்து Free Selection முடிந்த அனைவரும் 23-08-87 க்கு முன்சந்திக்கவும்

தலைமை அலுவலகம்:

Construction & Development Company Ltd.
37, S. D. B. S Jeyasinghe Mawatha, Nugegoda.

தொடர்பு:

V. P. பாலசுப்பிரமணியம்
(V. P. BALA)

c/o. N. V. பொன்னுத்துரை, பாடசாலை வீதி, கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

வெறும் பேச்சுக்களினால் பயனில்லை.
நின்று பயனளிக்கும் செயல்களே தேவை.
— நேருஜி.


உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

இல:- 292/2 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி 24805, 22073
21.8.1987 த.பெ.இல: - 23


# தமிழகமும் தவறும்

இலங்கை – இந்தியத் தலைவர்கள் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் குறித்து தமிழக அரசும் அங்குள்ள பெரும்பாலான மக்களும் திருப்தி அடைந்து இருக்கின்றார்கள்.

தமிழக அரசின் உடன்பாட்டோடுதான் ஜே. ஆர். - ராஜீவ் ஒப்பந்தம் செய்யப்பட்டது. ஆனால் தமிழக மக்களில் பெரும்பாலானவர்களும் அதனை ஆதரிக்கும் நிலை அங்கு ஏற்பட்டிருக்கிறது.

தமிழக அரசு இந்திய மத்திய அரசுக்குக் கட்டுப்பட்ட நிலையில் ஒப்பந்தத்துக்கு உடன்பட்டுப்போக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கலாம். ஆனால், ஒப்பந்தத்தின் மூலம் ஈழத்தமிழர் பிரச்சினை முற்று முழுதாகத் தீர்ந்து விட்டதாகக் கருதித் தமிழக மக்கள் அதனை வரவேற்பதன் காரணம் என்ன?

ஒப்பந்தம் தங்களுக்குப் பெரிதாக எதையும் செய்யப்போவதில்லை. தங்கள் உரிமைகள் எதையும் பூரணமாக வழங்கப் போவதில்லை. தமது விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்து, தடுத்து நிறுத்தவே இந்த ஒப்பந்தம் உருவானது. ஆகவே விடுதலைப் போராட்டத்தை வேறு வடிவத்தில் தொடர வேண்டும். பிரச்சினையில் நேரடியாகச் சம்பந்தப்பட்ட ஈழத் தமிழர்கள் மேற்கண்டவாறு கருதுகிறார்கள்.

கடந்த நான்கு வருடங்களாக, ஈழத் தமிழர் போராட்டத்துக்கு பெருமளவில் உதவியவர்கள் தமிழக மக்கள். ஈழத் தமிழர் பிரச்சினை சர்வதேச மயப்படுவதற்குப் பெரும் பங்காற்றியவர்கள் அவர்கள். தமது சொந்தப் பிரச்சினையாகக் கருதி பல்லாற்றானும் உதவியவர்கள் அவர்கள்.

ஒப்பந்தம் தமது விடுதலைப் போராட்டத்தை மழுங்கடித்து விட்டதாக ஈழத் தமிழர்கள் கருதும்போது தமிழக மக்கள் மட்டும் ஒப்பந்தம் சாதகமாக அமைந்துவிட்டதாக, ஈழத் தமிழர் பிரச்சினையைப் பூரணமாகத் தீர்த்துவிட்டதாகக்கருதிச் செயற்படுவது ஏன்? இதற்கு மூலகாரணம் என்ன?

அந்தக்காரணத்தை, தமிழகத்தில் இருந்து வந்த பேராசிரியர் ஈழநேசன் ஒளிவு மறைவின்றி, நீத்தல் சேர்த்தலின்றி, காய்தல் உவத்தலின்றி எடுத்துக் கூறியிருக்கிறார்.

ஈழத் தமிழரின் உண்மையான பிரச்சினைகள் தமிழகத்தில் நன்கு தெளிவு படுத்தப் பட்டிருக்கவில்லை.

ஈழத் தமிழ் மக்கள் இராணுவ ரீதியாகத் தாக்குதல்களுக்கு ஆளாக்கப்படுகிறார்கள். கொன்று குவிக்கப்படுகிறார்கள். அது ஒன்றே அவர்களுக்கு உள்ள பிரச்சினை என்றே தமிழக மக்கள் விளங்கிக் கொண்டார்கள்—

ஆட்சி உரிமைப் பிரச்சினை, தாயகத்தைக் காக்கும் பிரச்சினை, இறைமையை பயன்படுத்தும் பிரச்சினை போன்ற உள்ளார்ந்த முக்கிய அம்சங்கள் அவர்களுக்கு விளங்கவைக்கப் படவில்லை. ஈழத் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமைக்காகப் போராடுகிறார்கள் என்பது தமிழக மக்களுக்கு சரியான முறையில், அவர்கள் மனதில் பதியும் அளவுக்கு எடுத்துச் சொல்லப்படவில்லை—

இராணுவப் பிரச்சினையே உண்டு என்ற வகையில் அங்கு பிரசாரம் நடைபெற்றது. அதனால் அவர்கள், இந்தியா இராணுவத்தை அனுப்பித் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டும் என்று மத்திய அரசிடம் கோரினார்கள்.

இந்திய இராணுவம் இங்கு வந்து விட்டதால். ஈழத்தமிழர் பிரச்சினை முற்றாகத் தீர்ந்து விட்டதாகத் தமிழக மக்கள் கருதுகிறார்கள். அதனால் அவர்கள் இந்திய இராணுவம் இங்கு வர வகை செய்த ஒப்பந்தத்தையும் ஆதரிக்கிறார்கள்— பேராசிரியர் ஈழநேசன் முன்வைத்த காரணங்களும் கருத்துக்களும் இவை.

இதனை அவரது தனிப்பட்ட நோக்காகக் கருத இடமில்லை. உள்ளார்ந்த பிரச்சினைகளை தமிழக மக்களுக்கு சரிவர எடுத்துச் சொல்வதில், எமது பக்கம் வெற்றி காணவில்லை என்பது உண்மை நிலையே.

அதனால் எமது விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கு ஆதார சுருதியாக விளங்கிய தமிழகத்தின் ஆதரவை இழந்து நிற்கிறோம் என்பதும் உண்மை. எமது பிரச்சினையைச் சர்வதேச மயப்படுத்தி கூர்மை அடையச் செய்வதற்கு தளமாக அமையக் கூடிய தமிழகத்தின் ஆதரவை இழந்து நிற்கிறோம்.

ஈழத் தமிழர்களின் உள்ளார்த்தமான பிரச்சினைகளை, சஷ்டங்களை தமிழக மக்களுக்குச் சரிவர எடுத்துச் சொல்லாத குற்றத்தில் சகல தமிழர் விடுதலை அமைப்புகளுக்குமே பங்கு உண்டு என்பது கசப்பான உண்மையாகும்.

இனிமேலாவது இத்தகைய தவறுகள் தவிர்க்கப்பட வேண்டும். தமிழகத் தளத்தை மீண்டும் கட்டிஎழுப்ப முயற்சிக்க வேண்டும். அப்போதுதான் இந்திய மத்திய அரசையும் எமது நலனில் அக்கறை கொள்ளச்செய்ய முடியும். பிராந்திய, சர்வதேச ஆதரவையும் பெற முடியும்.

இழைத்த தவறைத் திருத்திக் கொள்பவனே தனது லட்சியப் பாதையில் முன்னேறுவான்.

# ஆந்திராவில் நக்ஸலைட்டுகள் தாக்குதல்!

## 10 பொலிஸார் கொலை

ஹைதராபாத், ஆக. 20

ஆந்திர மாநிலத்தில் நக்ஸலைட் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் 10 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

நக்ஸலைட்டுக்களின் முகாம் ஒன்றைக் கண்டுபிடிக்க காட்டில் பொலிஸார் நடத்திய தேடுதலின் போதுதான் தீவிரவாதிகள் சுட்டனர்.

தீவிரவாதிகளில் இரண்டு பேர் பெண்கள் என்று அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## வெளி உலகில்

# பூட்டாசிங்கின் உறவினர்கள் கொலை!

சண்டிகார், ஆக 20

உள்துறை அமைச்சர் பூட்டாசிங்கின் நெருங்கிய உறவினர்கள் ஆறு பேர் பஞ்சாப்பில் சீக்கியத் தீவிரவாதிகளால் சுட்டுக்கொல்லப் பட்டனர்.

திருமண வீடு ஒன்றுக்குள் புகுந்த தீவிரவாதிகள், அமைச்சர் பூட்டா சிங்கின் உறவினர்களைத் தவிர ஏனையோரை வெளியேறும்படி உத்தரவிட்டனர். அதன் பின்னர் உள்ளே இருந்தவர்களைச் சுட்டுக் கொன்றனர்.

மணமக்களும் கொலையுண்டனர்.

இச்சம்பவம் முஸாபூர் என்னும் இடத்தில் இடம் பெற்றது.

இன்னொரு இடத்தில் வேறு ஆறு பேர் தீவிரவாதிகளால் சுட்டுக் கொல்லப்பட்டனர். (உ-எ)

# சிம்பாப்வே நாடாளுமன்றத்தில் வெள்ளை எம்.பிக்களுக்கு இடமில்லை

ஹராரே, ஆக. 20

சிம்பாப்வே நாடாளுமன்றத்தில் வெள்ளையருக்கு இனிமேல் இடமளிப்பது இல்லை என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது

இதற்கான சட்ட மூலம் கடந்த புதன்கிழமை சிம்பாப்வே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன் காரணமாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 20 வெள்ளை இன எம்பிக்கள் பதவி விலக்கப்படுவர்,

1980இல் சிம்பாப்வே சுதந்திரம் பெற்று கறுப்பு இன ஆட்சி ஏற்பட்டது. அதைத் தொடர்ந்து உருவான புதிய அரசமைப்பின் படி வெள்ளை இன எம்பிக்களுக்கு என்று 20 இடங்கள் நாடாளுமன்றத்தில் ஒதுக்கப்பட்டன.

அந்த 20 இடங்களையுமே ரத்துச் செய்து விடுவது என்று புதிய சட்டம் கூறுகின்றது.

இச்சட்டம் ஜனாதிபதியின் அங்கீகாரத்தைப் பெற்றவுடன் 20 வெள்ளை எம்பிக்களும் பதவி துறப்பர்.

அந்தக் காலி இடங்களுக்கு பிரதமரின் சிபார்சின் பேரில் ஜனாதிபதி புதிய உறுப்பினர்களை நியமிப்பார்.

அந்த நியமனங்கள் இனரீதியில் இடம்பெற மாட்டா என்று சொல்லப்படுகின்றது

சிம்பாப்வே நாடாளுமன்றத்தின் மொத்த உறுப்பினர் எண்ணிக்கை 100 ஆகும்.

வெள்ளை இன ஆட்சியின் கீழ் சிம்பாப்வேயின் பெயர். ரொடீஷியா என்று அழைக்கப்பட்டு வந்தது. (இ-எ)

## 9 வயதுச் சிறுவனின்சாதனை

லண்டன் ஆகஸ்ட் 20

பதினெட்டு வயதில் எடுக்க வேண்டிய பரீட்சையை ஒன்பது வயதில் எடுத்து சித்தியடைந்து சாதனை படைத்த ஒரு சிறுவன் பற்றி ராய்ட்டர் செய்தி ஸ்தாபனம் அறிவித்திருக்கின்றது.

பிரிட்டனின் உயர்தர தேசியப் பரீட்சையில் சித்தி எய்தியவர்கள் பல்கலைக் கழகப் படிப்புக்கு அனுமதி பெறலாம்.

18 வயதில்தான் மாணவர் இப்பரீட்சையை எடுப்பர்.

ஆனால் ஜோன் அடம்ஸ் தனது 9 ஆவது வயதில் இப்பரீட்சையை எடுத்துச் சித்தி எய்தினான்.

சோதனையில் வழங்கப்பட்ட இரண்டு வினாத்தாள்களுக்கு குறிப்பிட்ட நேரத்துக்கு 40 நிமிடங்களுக்கு முன்னரே மறுமொழி எழுதிவிட்டான் இச்சிறுவன்.

மத்திய லண்டனில் உள்ள லைஷெய்ஸ்டர் ஆரம்பப் பள்ளியில் இவன் பரீட்சை எடுத்தான்.

விசேஷமாகச் செய்யப்பட்ட மேசை, கதிரை சிறுவனுக்கு வழங்கப்பட்டன.

ஏற்கனவே இச்சோதனையை எடுத்துச் சாதனை புரிந்திருந்தான் 9 வருடங்கள் 10 மாதங்கள் வயதான றுத் லோறன்ஸ். இச் சாதனையை அடம்ஸ் முறியடித்துவிட்டான். (இ-எ)

## லண்டனில் 14 பேர் சுட்டுக் கொலை!

லண்டன், ஆக. 20

லண்டன் தெற்குப் பகுதியில், துப்பாக்கி மனிதன் ஒருவன் நடத்திய வெறியாட்டத்தில் 14 பேர் கொல்லப்பட்டனர்; 16 பேர் படுகாயம் அடைந்தனர்.

இச்சம்பவம் கடந்த புதன்கிழமை பகல் இடம் பெற்றது.

## தேர்தல் ரத்து பற்றிபோத்தா

கேப்டவுன், ஆக. 20

1989இல் நடத்த இருந்த வெள்ளையருக்கு மட்டுமான பொதுத் தேர்தலை ரத்துச் செய்வதாக தென்ஆபிரிக்க ஜனாதிபதி பீட்டர் போத்தா நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

தேர்தலுக்குப் பதில் வெள்ளையர் மட்டும் பிரதிநிதித்துவம் செய்யும் தற்போதைய நாடாளுமன்றத்தின் ஆயுட்காலத்தை நீடிக்கப்போவதாக ஜனாதிபதி அறிவித்தார். (இ-எ)

## முதலைகள் 'உண்ணாவிரதம்'

மாஸ்கோ, ஆக. 20

மாஸ்கோ மிருகக் காட்சிச் சாலையில் உள்ள முதலைகள் உண்ணாவிரதம் மேற்கொண்டுள்ளன.

இப்படி மாஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சிப் பத்திரிகையான 'மாஸ்கோ சகாய பிராவ்தா' செய்தி வெளியிட்டுள்ளது.

மிருகக் காட்சிச் சாலையில் புதிய இடம் ஒன்றுக்குமாற்றம் செய்ததைத் தொடர்ந்தே உணவு அருந்த முதலைகள் மறுத்து வருவதாக அப்பத்திரிகைமேலும் தெரிவித்தது. (இ-எ)

## இந்தியாவுக்கு அனுமதி

ஐ நா, ஆக. 20

இந்து சமுத்திரத்தில் கடல் படுகை ஆராய்ச்சிகளை நடத்த இந்தியாவுக்கு பிரத்தியேக உரிமையை ஐ நா.வழங்கி இருக்கின்றது.

இந்து சமுத்திரத்தில் குறிக்கப்பட்ட பகுதியில் (சுமார் 5 8ஆயிரம் சதுர கிலோ மீற்றர்) கடல் படுகை ஆராய்ச்சிகளை இந்தியா மேற்கொள்ள ஐ.நா. தீர்மானம் வழி வகுத்துள்ளது.

இதுகாலவரை ஐ.நா. இப்படி ஒரு நாட்டிற்கு முழு உரிமை வழங்கியது கிடையாது. (இ-எ)

# வடக்கு-கிழக்கு இணைந்த மாகாணத்தின் புதிய பெயர் என்ன?

## 'ஈழம்' என்று இருக்காது என்கிறார் ஜனாதிபதி

லண்டன் டைம்ஸ், நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகைகளுக்கு ஜனாதிபதி ஜெயவர்த்தன அளித்த பேட்டியின் இறுதிப் பகுதி இங்கு பிரசுரமாகிறது.

கேள்வி: இளைஞர்களால் எடுக்க முடியாத பெரிய தீர்மானங்களை உங்களால் எடுக்க முடிகின்றதா?

ஜே. ஆர்: உள்ளுணர்வு, அனுபவம் எனக்கு உதவுகின்றன. இராணுவ அரசியல், சமூக ரீதியான தலைவர்களின் இரகசியமே சரியான நேரத்தில்சரியான தீர்மானத்தை எடுப்பது தான்; அது உள்ளுணர்வால் அவர்களுக்கு வருகின்றது.

உதாரணத்துக்கு ஒரு வழக்கறிஞர் வழக்கு ஒன்றில் வாதாடுகின்றார். திடீரென்று குறிப்பிட்ட விதத்தில் வாதாட வேண்டும் என்று உள்ளுணர்வு அவருக்குக் கூறுகின்றது.

அனுபவமற்றவர்களுக்கு இது வராது. சிறிய கதை ஒன்றை உங்களுக்குச் சொல்லுகின்றேன்.

'நெப்போலியன் துருப்புக்களின் அணிவகுப்பை பார்த்துக் கொண்டு வந்தான், ஆஸ்டெலிட்ஸ் யுத்தத்துக்கு முன்னர். அணி வகுப்பில் இருந்த சிப்பாய் ஒருவன் திடீரென்று முன்னே வந்து சொன்னான்: 'இந்த வழியால் தான் எதிரிப் படைகள் வரும், இந்த வழியால் தான் தாக்குவார்கள்' என்று

நெப்போலியன்சொன்னான் 'வாயை மூடும். உமது வரிசைக்குத் திரும்பும்'—

யுத்தத்தில் நெப்போலியன் வென்றான். எதிரிப்படைகளை நெப்போலியன் தூளாக்கினான்.

'வரிசையை விட்டு வந்து பேசிய சிப்பாய் எங்கே?— நெப்போலியன் கேட்டான்.

துரதிருஷ்ட வசமாக அந்தச் சிப்பாய் சூடுபட்டு இறந்து விட்டான்.

நெப்போலியன்சொன்னான்: அச்சிப்பாய் அதி புத்திசாலி எதிரிப்படை எந்த வழியால் வரும்? நான் என்ன செய்யப் போகின்றேன்? என்பது அச்சிப்பாய்க்குத் தெரிந்திருந்தது. அதனால்தான் வாயை மூடும்படி அவனுக்குச் சொன்னேன். அதுதான் உள்ளுணர்வு.

சிலவேளை நானும் பெறுகின்றேன். ராஜீவிடம் இருந்து செய்தி வந்தது. உடனே நான் பற்றிப் பிடித்துக் கொண்டேன். வெறும் உள்ளுணர்வே அது.

கேள்வி: சிலர் உங்களை மாக்கியவெல்லியான் என்று வர்ணிக்கிறார்களே!

ஜே ஆர்: பௌத்தன், கத்தோலிக்கன், என்று ஏன் சொல்லவில்லை. நான் அஹிம்சை வாதி. காந்தியவாதியும் கூட. உண்மையை நான் நம்புகின்றேன். உண்மையற்றதை நான் பேசியிருப்பேன் என்று எண்ணவில்லை. பச்சைப்பொய் கூட பேசியிருக்க மாட்டேன். பாடசாலை நாட்களிலேயே காந்திஜியின் சிந்தனைகள் எனது மனதைத் தொட்டன. [illegible]

காந்திய வழியில் நான் படித்து வந்தேன். இந்தியரிலும் பார்க்க ராஜீவ் காந்தியிலும் பார்க்க, நான் ஒரு காந்தியவாதி.

ராஜீவ் காந்தி பேசியது, செய்தது ஆகியவற்றில் பெரும்பாலானவற்றை நான் செய்திருக்க மாட்டேன்.

அந்தச் சரக்கை (உணவுப் பொதி) நான் போட்டிருக்க மாட்டேன். அது ஒரு முட்டாள் தனமான செயல்; காந்திய செயல் அல்ல.

கேள்வி: யாழ்ப்பாணத்தில் கடுமையான இராணுவத் தாக்குதலை நடத்தினீர்களே!

ஜே.ஆர்: அரசாங்கத்தை அழிக்க முயன்ற மக்களுக்கு எதிராக அது நடத்தப்பட்டது.

கேள்வி: தேவையான நகரத்தில் பலாத்காரம் பாவிக்கத் தயாராயுள்ள காந்தீயவாதி நீங்கள்!

ஜே.ஆர்: ஆம், நிச்சயமாக. என்னை நீங்கள் அடிக்க நினைத்தால் நான் உங்கள் மீது பலாத்காரம் பாவிப்பேன். அதில் சந்தேகம் இல்லை. காந்தீய தத்துவத்தில் அந்தக் கட்டத்துக்கு நான் வந்து விட்டேன்.

கேள்வி: இப்போது காணப்பட்டுள்ளதுதான் இறுதியும் நிரந்தரமான தீர்வாகும்?

ஜே.ஆர்: ஆம். நான் அப்படித்தான் நினைக்கின்றேன்.

கேள்வி: அதை விவரிக்கின்றீர்களா?

ஜே.ஆர்: தீவிரவாதிகள் பின்பற்றினால் இந்தியாவும் இலங்கையும் ஒப்பந்தத்தை பின்பற்றும் என்று நினைக்கின்றேன்.

கேள்வி: தென் இலங்கையில் உள்ள சிங்கள எதிர்ப்பாளர்கள்?

ஜே.ஆர்: நான் சிங்களவரைப் பிரதிநிதித்து [illegible] எனது அரசும் அவர் [illegible] பிரதிநிதித்துவம்

(4ம் பக்கம் பார்க்க)



## பொய்யாமொழி

**குறள்:**
அச்ச முடையார்க்கு அரணில்லை ஆங்கில்லை
பொச்சாப் புடையார்க்கு நன்கு.

**பொருள்:**
உள்ளத்தில் அச்சம் உடையவர்க்குப் புறத்திலே அரண் இருந்தும் பயன் இல்லை; அதுபோல மறதி உடையவர்க்கு நல்ல நிலை வாய்த்தும் பயன் இல்லை.

# தமிழ்த் தாய் ஒருவர் ராஜீவுக்குக் கடிதம்

யாழ்ப்பாணம், ஆக. 21

மகஸீன் சிறையில் வைக்கப்பட்டுள்ள தனது மகனின் பாதுகாப்புக் குறித்துக் கவலை தெரிவித்தும் மகனை விடுதலை செய்யும்படி கோரியும் இந்தியப் பிரதமர்ராஜீவ் காந்திக்கு தூதுவர் டிக்ஸிற் ஊடாக சுழிபுரத்தைச் சேர்ந்த திருமதி எம். சுப்பிரமணியம் என்ற பெண் கடிதம் எழுதி உள்ளார்.

அக்கடிதம் வருமாறு:-

தங்களுக்கும் எமது ஜனாதிபதி ஜே ஆர்: ஜெயவர்த்தனவுக்கும் இடையே ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து அரசியல் கைதிகள் அனைவருக்கும் பொது மன்னிப்பு வழங்கப்படும் என்ற செய்தி கேட்டு மகிழ்வடைந்த ஆயிரக்கணக்கான தாய்மார்களில் நானும் ஒருத்தி.

எனது மகன் சுப்பிரமணியம் சத்தியராஜன் (மீரான் மாஸ்டர்) மாணவர் போராட்டங்களினூடாகத் தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டது உண்மை. இதன் காரணமாக இவர் இலங்கை இராணுவத்தினரால் நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்தார்.

இக்காலப்பகுதியில் எனது வீடு இருதடவை சோதனைக்குட்படுத்தப் பட்டது. உடற் சுகவீனமான எனது கணவர் ஆனையிறவு இராணுவ முகாமில் மூன்று தடவைகள் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்.

இவற்றைத் தொடர்ந்து எனது மகன் சத்தியராஜன் கைது செய்யப்பட்டு 2½ வருடங்களுக்கு மேலாக எவ்வித நீதி விசாரணையுமின்றி பல்

(4ஆம் பக்கம் பார்க்க)

## சமய சந்திகளில்

### முகூர்த்தக் கால்நடும் வைபவம்

யாழ்ப்பாணம், ஆக. 21

பருத்தித்துறை – புலோலி பசுபதீஸ்வரர் கோவிலில் கோபுரம் ஒன்று கட்டப்படவுள்ளது.

கோபுரம் கட்டுவதற்கான முகூர்த்தக் கால் நடும் வைபவம் நாளை 22 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 30 மணியளவில் நடைபெறும். (இ-161)

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

### நல்லூரானை வணங்குங்கள்

நல்லூரானை வணங்குங்கள்
நாளும் நமக்குத் துணையிருப்பான்
கொல்லும் வினைகள் கொன்றிடுவான்
கோடி யின்பம் தந்திடுவான்.

கல்லும் கனிந்து கனியாகும்
கருணை வடிவம் அவனாகும்
வெல்லும் வழியே காட்டுகின்ற
வேந்தன் கையில் வேலாகும்.

சொல்லும் செயலும் அவன்பெருமை
சொல்லும் படியே தொழுவார்க்கு
நல்கும் வள்ளல் அவனாகும்
நாதன் உருவே அழகாகும்.

— வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




# உதயன்

21 08 1987 வெள்ளிக்கிழமை

நல்லூர்க் கோயில் முன் வீதியில் உள்ள
★ எமது விளம்பர நிலையத்தில் ★
★ அ ண் ணு ★
கோப்பியை
வாங்கி, இனும் பொருள்களாகிய முருகன் ஸ்ரிக்கர், முருகன் அர்ச்சனை மாலை ஆகிய வற்றினைப் பெற்றுக்கொள்ளலாம்

## ஜனாதிபதியின் உயிரை காப்பாற்றியவரின் உயிர் ஊசலாடுகிறது

கொழும்பு, ஆக. 21

ஜனாதிபதியின் உயிரைக் காப்பாற்றிய அரசாங்கக் கொரடாவின் எழுதுவினைஞர் என். சேனுதீரா உயிருக்குப் போராடுவதாக அறிவிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியை நோக்கி அப்பாக்கி வேட்டுத் தீர்க்கப்பட்டபோது, பைல் ஒன்றைக் கொடுப்பதற்காக ஜனாதிபதி முன் நின்ற சேனுதீராவையே அந்த வேட்டுத் தாக்கியது.

சேனுதீராவின் உயிரைக் காப்பாற்ற டாக்டர்கள் போராட்டம் நடத்துகின்றனர். (இ-எ)

## ஹமீத் அமெரிக்க பயணம்

கொழும்பு, ஆக. 21

வெளிவிவகார அமைச்சர் சாகுல் ஹமீதுநேற்று அமெரிக்கா பயணமானார்.

ஆயுத பரிகரணம் அபிவிருத்தி சம்பந்தமான மாநாடு ஒன்றில் கலந்து கொள்ளவே அமைச்சர் சென்றிருப்பதாகக் கொழும்பில் அறிவிக்கப்பட்டது. (இ-எ)

## இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் நிவாரணம்

யாழ்ப்பாணம், ஆக. 21

கெருடாவில் கிராம சேவகர் பிரிவில் கொல்லப்பட்டு வீடுகள் எரிக்கப்பட்டும் பாதிப்புக்குள்ளான குடும்பங்களை நேரில் பார்வையிட்டு நிவாரணம் வழங்க பருத்தித்துறை இராமகிருஷ்ண மிஷன் சுவாமிகள் சம்மதம் தெரிவித்திருக்கின்றார்.

கெருடாவில் கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வேண்டுகோளுக் கிணங்க இவ்வுதவிகளை வழங்க சுவாமிகள் இம்மாதம் 23ஆம் திகதி விஜயம் செய்வார் என்று சங்கச் செயலாளர் அறிவிக்கின்றார்.

பாதிக்கப்பட்டோருடைய தேவைக்கு ஏற்றபடி உடைகள், பாத்திரங்கள், குடிசை அமைக்கும் பொருள்கள் ஆகியவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (இ-எ)

## அமைச்சர்களின் வாகனங்களும் சோதனை

கொழும்பு, ஆக. 21

அமைச்சர்களின் வாகனங்களையும் சோதனையிட பொலீஸாருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கொலை முயற்சிச் சம்பவத்தைத் தொடர்ந்து இந்த அதிகாரம் பொலீஸாருக்கு வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர்கள், எம். பிக்கள் உட்பட அரசப் பிரமுகர்களின் வீடுகளுக்குப் பாதுகாப்பு வழங்கும்படி கொழும்பில் உள்ள சகல பொலீஸ் நிலையங்களுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது. (இ-எ)

## யாழ்ப்பாணத்தில் உள்ள திணைக்களங்களின் சேத விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஆக. 21

யாழ்ப்பாணத்தில் உள்ள அரச திணைக்களங்களின் உயர் அதிகாரிகளை யாழ் அரச அதிபர் சந்தித்து அவற்றின் சேத விவரங்களைக் கோரியுள்ளார்.

புதன்கிழமை காலை இச் சந்திப்பு இடம்பெற்றது.

கல்வித் திணைக்களம், தொலைத் தொடர்புத் திணைக்களம், கூட்டுறவுத் திணைக்களம், வைத்திய சாலை, வங்கிகள் மற்றும் அனைத்துத் திணைக்களங்களிலும் இருந்து உயர் அதிகாரிகள் இதில் கலந்து கொண்டனர்.

இந்த திணைக்களங்களுக்கு ஏற்பட்ட சேத விவரங்களை அறிக்கை மூலம் தரும்படி அரச அதிபர் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டார்.

சேத விவரங்கள் அந்தந்த அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளன. (இ-7)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஆக. 21

இன்று வெள்ளிக்கிழமை காலை 10-00 மணிக்கு விஞ்ஞான பீட மாணவன் பி. றயாகரன் பிரச்சினை தொடர்பாக பொதுக்கூட்டம் ஒன்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சகல மாணவர்களையும் சமுகமளிக்குமாறு மாணவர் குழு கேட்டுக் கொள்கிறது. (இ-)

## ராஜீவின் விஜயத்தை பிரேமா பகிஷ்கரித்தது ஏன்?

இலங்கையின் இறைமையை இந்தியா அவமதித்ததால்தான் பிரதமர் காந்தியை வரவேற்ற வைபவத்திலும் ஒப்பந்தம் கைச்சாத்திடும் வைபவத்திலும் நான் கலந்து கொள்ளவில்லை.

— இப்படி பிரதமர் பிரேமதாஸ சொன்னார்.

நேற்று அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்திற்கு பதில் அளித்துப் பேசுகையில் பிரதமர் இப்படிக் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது :-

பிரதமர் காந்தி மீது கொழும்பில் நடத்தப்பட்ட தாக்குதல் இந்தியாவையும் அவமதிப்பதாகும்.

நாட்டின் ஒற்றையாட்சியையும் சுதந்திரத்தையும் யு என் பி. பாதுகாக்கும் என்ற உறுதி பூண்டதால்தான் நான் அக்கட்சியில்சேர்ந்தேன்.

தமிழ்த் தீவிரவாதிகள் பெருந்தொகை ஆயுதங்களை ஒப்படைத்துள்ளனர். இது மகிழ்ச்சி தருகிறது.

இவ்வளவு ஆயுதங்களை அவர்களால் நாட்டிற்குள் எப்படிக் கொண்டு வர முடிந்தது? —இப்படி பிரதமர் கேட்டார்

## முதலுதவி பத்திரிகை வெளியீட்டுவிழா

யாழ்ப்பாணம், ஆக 21

சர்வதேச சென். ஜோன் அம்புலன்ஸ் படை வடமாகாணப் பிரிவின் முதலுதவிப் பத்திரிகை வெளியீட்டு விழா யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று பிற்பகல் 2 மணியளவில் நடைபெறும்.

டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் கலந்துகொள்வார்.

முதலுதவிப் பத்திரிகையை யாழ் போதனு வைத்தியசாலை பணிப்பாளர் டாக்டர் எஸ் நச்சினார்க்கினியன் வெளியிட்டு வைப்பார்.

பல வர்த்தகப் பிரமுகர்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்வர்.

திரு. ஸ்ரீ ரங்கநாதன் பத்திரிகை பற்றி விமர்சனம் செய்வார், (இ-ஒ)

## 40 ஆயிரம் - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ணுவத்தினர் இதுவரை சுமார் 25 ஆயிரம் நிலக்கண்ணி வெடிகளை மீட்டெடுத்தனர்.

நிலக்கண்ணி வெடிகளை மீட்பதற்கென கொழும்பில் இருந்து நிபுணர்களும் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ந்தும் நிலக்கண்ணி வெடி அகற்றும் வேலைகள் வடமராட்சிப் பகுதியில் நடைபெற்று வருகின்றன. (இ-10)

## காங்கேசன் விகாரையும் இயங்கும்

காங்கேசன்துறையில் உள்ள திஸ்ஸ பௌத்த விகாரையும், சிங்கள வித்தியாலயமும் அடுத்த மாதம் அளவில் மீண்டும் செயற்பட உள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை விகாரையின் பௌத்த குரு காங்கேசன்துறையில் இருந்த மேற்கொண்டுவருகிறார்.

1983 ஆண்டு யாழ். குடாநாட்டில் இடம் பெற்ற அசம்பாவிதங்கள் காரணமாக இப்பகுதிகளில் இருந்த பௌத்த விகாரைகளும் சிங்களப்பாடசாலைகளும் மூடப்பட்டது தெரிந்ததே. (இ-10)

(2-ம் பக்கமும் பார்க்க)

## பெரியாஸ்பத்திரி பாதுகாப்பு பிரதேசம்

கொழும்பு பெரியாஸ் பத்திரியைச் சுற்றியுள்ள பகுதி பாதுகாப்புப் பிரதேசமாகக் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

ஆயுதம் தரித்த இராணுவத்தினர் காவலில் ஈடுபட்டிருக்கின்றனர்.

நாடாளுமன்றக் கட்டடக் குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்த அரசியல் வாதிகள் பெரியாஸ்பத்திரியில் தற்சமயம் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

அதைத் தொடர்ந்தே இத்தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

நோயாளர்கள் கொண்டு செல்லும் உணவுப் பொருள்கள், தலையணை முதலியன நுணுக்கமாக சோதனை செய்யப்படுகின்றன.

## வெளிநாட்டுச் செய்தியாளர் படை எடுப்பு

விடுதலைப் புலிகளின் அலுவலகத்தை நோக்கி நேற்று 20க்கும் மேற்பட்ட வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களும் செய்தி முகவர்களும் படையெடுத்தனர்.

பத்திரிகையாளர்களை சந்தித்த விடுதலைப் புலிகளின் பிரதித் தலைவர் திரு. மாத்தயா, அவர்களுக்கு பேட்டியும் அளித்தார்.

இராணுவத் தாக்குதல்களினுல் சேதமடைந்த இடங்களை இவர்கள் பார்வையிட்டதுடன் பாதிக்கப்பட்ட மக்களையும் சந்தித்து உரையாடினுர்கள். (இ-10)

## நாடாளுமன்ற செய்திகள் தணிக்கை

கொழும்பு, ஆக 21

நாடாளுமன்ற நடவடிக்கைகளைப் பிரசுரிப்பதற்குத் தணிக்கை விதிக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு இது பொருந்தும் என்று சபாநாயகர் ஈ. எல். சேனநாயகா நேற்றுத்தெரிவித்தார். இதற்காக கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டது.

நாடாளுமன்றம் நேற்றுக் கூடியதும் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

நாடாளுமன்றக் கட்டடத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் பற்றிய விசாரணைகள் பாதிக்கப்படாமல் இருப்பதற்காக பத்திரிகைத் தணிக்கை கொண்டு வரப்பட்டிருப்பதாக சபாநாயகர் காரணம் தெரிவித்தார்.

## யாழ். லியோ கழக சேவைக்கு உதவுங்கள்

யாழ். லியோ கழகத்தினர் ஜெய்ப்பூர் கால் நிதிக்காகவும், தமது சேவை நிதிக்காகவும் பணம் சேர்ப்பதற்காக நல்லூர்க் கந்தன் ஆலய வீதியில் ஒரு சேவைநிதி நிலையத்தைத் திறந்துள்ளார்கள்.

இவர்களால் விற்கப்படும் அதிர்ஷ்ட லாபச்சிட்டுகளையும் ரீசேட், திறப்புக் கோர்வை, ஸ்ரிக்கர் போன்ற பொருள்களையும் வாங்கி நீங்களும் இவர்களது சேவைகளுக்கு உதவுங்கள்.

★ சேவைகளிற் சிறந்தது மக்கள் சேவையே ★

இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனம்
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
காங்கேசன்துறை

முருங்கன் களிமண்புலத்தில் களிமண் ஏற்றிவந்து
தொழிற்சாலையில் பறிப்பதற்கான

## கேள்விப் பத்திரம்

காங்கேசன்துறையில் இருக்கும் எமது தொழிற்சாலைக்கு முருங்கன் களிமண்புலத்திலிருந்து லொறிகளில் களிமண் ஏற்றிப் பறிப்பதற்கான கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி கேள்விப் பத்திரங்கள் விநியோக உத்தியோகத்தர் காரியாலயத்தில் கிழமை நாட்களில் காலை 8-30 மணி தொடக்கம் மாலை 4-00 மணி வரையும் சனிக்கிழமையில் பகல் 12-00 மணி வரையும் மீளப் பெறமுடியாத வைப்புப் பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப் பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்கள் 1987-08-26 ஆம் திகதி மாலை 2-00 மணிவரை விநியோகிக்கப்படும்.

கேள்விப்பத்திரகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்கள் 1987 - 08 - 27 ஆம் திகதி காலை 10-30 மணிக்கு கேள்விப் பத்திரகாரர் முன்னிலையில் திறக்கப்படும்.

இங்ஙனம் உண்மையுள்ள
தொழிற்சாலை முகாமையாளர்
காங்கேசன் சிமெந்துத் தொழிற்சாலை
1987-08-20 காங்கேசன்துறை.

## ஜனாதிபதி---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பூனைகள்'' படையினரை கொழும்பு செல்லுமாறு பிரதமர் விசேட உத்தரவிட்டார்.

அதையடுத்து கறுப்புப் பூனைப் படையினர் விசேட விமான மூலம் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

நிலைமையை அனுசரித்து அரசாங்க எம் பிக்கள் அனைவருக்கும் 'கறுப்புப் பூனைகளின்' பாதுகாப்பு விஸ்தரிக்கப்படும் எனவும் அறிய வந்துள்ளது. (அ-உ-10)

## வடக்கு----

(3-ம்பக்கத் தொடர்ச்சி)

செய்கின்றது: அவர்களும் வின்பற்ற வேண்டும் இல்லையேல் அடக்கப்படுவார்கள்.

அடுத்த தேர்தல் அரசமைப்பு ரீதியானது. அவர்கள் கடைகளை எரிக்க முடியாது; ஆட்களைக் கொல்ல முடியாது.

கேள்வி: தென் இலங்கையில்உள்ள ஜே வி.பி. பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?

ஜே.ஆர்: 1971 கலவரம், வடபகுதிக் கலவரம் போன்று இது பாரதூரமானதாக இருக்க முடியாது. இதற்கு விரைவில் முடிவு கண்டு விடலாம்.

கேள்வி: ஜே வி. பி. யுடன் பேச்சுக்கள் நடத்துவீர்களா?

ஜே ஆர்: அவர்கள் தயாரானுல்.

கேள்வி: அவர்கள் தடை செய்யப்பட்டிருப்பின்...

ஜே.ஆர்: ஆயுதங்களைக் கீழே போட்டால் பேச்சுக்கள் நடத்தப்படும். ஆயுதங்களைக் கீழே போடும் வரை பேச என்ன இருக்கின்றது? அவர்கள் ஏன்முன் வந்து தேர்தலில் போட்டியிட முடியாது?

கேள்வி: வடக்கு, கிழக்கு மாகாணங்கள் ஒன்ருக இணையும்போது வைப்பதற்கு புதிய பெயர் ஒன்று தெரிவு செய்துள்ளீர்களா?

ஜே.ஆர்: இன்னும் இல்லை

கேள்வி: புதிய மாகாணம் ஈழம்என்று அழைக்கப்பட மாட்டாது.

ஜே.ஆர்: அழைக்கப்பட மாட்டாது என்று நம்புகின்றேன். (முற்றும்)

## தமிழ்த்---

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வேறு இராணுவ முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டு சொல்லொணுச் சித்திரவதைகளுக்கும் உட்படுத்தப்பட்டார்.

அண்மையில் இவர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு மகஸீன் சிறைச் சாலைக்கு மாற்றப்பட்டார். இங்குள்ள 260 அரசியல் கைதிகளுக்கும் எந்நேரத்திலும் எதுவும் நடக்கலாம் என்றும் அவர்களுக்குப் போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும், நீண்ட காலம் சிறைவாசம் அனுபவித்து அண்மையில் விடுதலை பெற்று வந்த வணக்கத்துக்குரிய பிதா சிங்கராயர் சுவாமிகள் மூலமாக அறிந்து மிகவும் மன வேதனையடைந்தேன்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இன்றுடன் 21 தினங்கள் ஆகின்றது. போராளிகளும் ஆயுதங்களை ஒப்படைத்து விட்டார்கள். இருந்த போதிலும்இதுவரை கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 260 அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்படவில்லை.

தயவு செய்து என்னைப் போன்று தனது பிள்ளைகளைப் பிரிந்து தவிக்கும் ஏனைய தாய்மார்களுக்கும் உதவும் வகையில் உரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்குமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக் கடிதத்தில் கேட்கப்பட்டுள்ளது.

## அவசரகால - - -

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

டது.

110 எம். பிக்கள் ஆதரவாக வாக்களித்தனர். பத்து எம் பிக்கள் (சுதந்திரக்கட்சி, மக்கள் ஐக்கிய முன்னணி) எதிர்த்து வாக்களித்தனர்.

வாக்களிப்பு இடம் பெற்ற சமயம் சலவான எம். பி டியூ குணசேகரா சபையில் இருக்கவில்லை. (இ-எ)

## பயங்கர----

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தார்.

அமைச்சர் காமினி திஸநாயக்கா பேசுகையில் சொன்னதாவது;

நாடு தொடர்ந்து அழிவுப் பாதையில் சென்று கொண்டிருப்பதைத் தடுத்து நிறுத்த உறுதியான தீர்வு எடுக்கவேண்டியதாயிற்று. இத்தீர்வு குறித்து சிலர் பிழையான கருத்துக்கள் கொண்டுள்ளார்கள். அது குறித்து நாம் கவனம் செலுத்தமுடியாது

இந்த அரசாங்கம் தனது பதவிக் காலத்தை நீடிக்க சர்வசன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தாது. எந்தநடவடிக்கையும் அரசமைப்புக்கு உட்பட்டதாகவே இருக்கும்.

இப்படி அமைச்சர் காமினி திஸநாயக்கா சொன்னார்.

அக்மீமன எம். பி. திரு. ரிச்சர்ட் பத்திரன பேசுகையில்,

வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த தமிழ் இளைஞர்கள் விடுவிக்கப் படுவதுபோன்று, ருகுண சிங்கள இளைஞர்களும் விடுவிக்கப்படவேண்டும்- என்று சொன்னார் (இ-எ)

நல்லூர் மகோற்சவத்தை முன்னிட்டு
உதயன் நடத்தும்

## அதிர்ஷ்டப் பயணப் போட்டி

பெயர் ____________________
முகவரி ____________________

நல்லூர்க் கந்தன் ஆலயத்தில் மணிக்கோபுரங்கள் எத்தனை?

உதயன் ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

நல்லூரை வழிபட்ட இரு ஈழத்துச் சித்தர்கள் யாவர்?

சஞ்சீவி வார இதழின் இலட்சிய வாசகம் என்ன?

போட்டி முடிவடைவதற்கு இன்னும் சில தினங்கள் மட்டுமே இருக்கின்றன.

நீங்கள் சேகரித்த கூப்பன்களை உடன் அதற்குரிய பெட்டிகளில் சேர்ப்பியுங்கள்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் [illegible] 898/2, இலக்கத்தில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. வெளியிட்ட திகதி: 21-08-1987

Printed and Published by New Uthayan Publications (Pvt) Ltd. 898/2 Navalar Road, Jaffna on Friday August, 21 1987

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org